1421

[R]egd. No M 878.

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மக்ஞானம், மதம், சாஸ்திரம், [illegible]ரீகம்

இவைகளைப் பரவச்செய்[illegible]

ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

தொகுதி 9 } காளயுக்தி௵ தைமீ 1919௵ ஜனவரிமீ { பகுதி 9

5 MAR 1924

விஷயங்கள்

1.	பத்திராதிபர் பக்கம்	249
2.	தற்காலநிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர், பி. எ.	250
3.	சாரணர் பக்கம்	259, 275
4.	பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)—வி. வெங்கு சாமி ஐயர்	257
5.	பகவத் ஸ்துதி—இராமசந்திர நாயுடு	260
6.	யான் செய்யவேண்டியதென்ன—எஸ். வெங்கடாசலம் ஐயர்,	270
7.	தர்மம்—எம் எம். நாராயணசாமி ஐயர்	277
8.	பம்பாய் ஸேவா ஸதனம்	278
9.	சமாசாரம்	279
10	பத்திரிகை விமர்சம்,	279
11.	புத்தகவிமர்சம்	280

அ. ரெங்கசாமி ஐயர் B. A., B. L. பத்திராதிபர்

தபால் சார்ஜ உள்பட வருஷச் சந்தா இந்தியாவுக்கு ரூ 2
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4

மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்
[illegible]பதிப்பிக்கப்பெற்றது.

[Cop]y-right Reserved.

நமது திருத்தப்பட்ட விளம்பர விகிதங்கள்.

	1 வருஷம்	9 மாதம்	6 மாதம்	3 மாதம்	1 மாதம்
1 பக்கம்	ரூ 50	ரூ 38	ரூ 28	ரூ $14\frac{1}{2}$	ரூ 5
$\frac{3}{4}$ ஷை	ரூ 38	ரூ 28	ரூ 20	ரூ 11	ரூ 4
$\frac{1}{2}$ ஷை	ரூ 26	ரூ 20	ரூ 14	ரூ 8	ரூ 3
$\frac{1}{4}$ ஷை	ரூ 14	ரூ 11	ரூ $7\frac{1}{2}$	ரூ 4	ரூ $1\frac{3}{4}$
1 அங்குலம்	ரூ 10	ரூ $7\frac{1}{2}$	ரூ $5\frac{1}{2}$	ரூ 3	ரூ 1

அடியில்கண்ட புஸ்தகங்களை நீங்கள் அவசியம் வாங்கவேண்டும்.

முந்துங்கள்! விலைசொற்பம்!

1	ஸாக்ரடீஸ் சரித்திரம்—புரொபஸர் ரெங்காச்சாரி	0—12—0
2	விக்கிரஹாராதனை—சம்பாஷணை—கே. எஸ். ராமச்சந்திரய்யர்	0—1—0
3	மீனாக்ஷிசுந்தரம்—நாடகம்-வெங்கிட்டராமய்யர்	0—6—0
4	கல்வி கற்பித்தல்—ஈஸ்வர கைங்கரியம் ...	0—8—0
5	எனது பிரதிக்ஞை	0—12—0
6	பிரஹ்மக்ஞானத்தின் விசாரத்தால் நமக்குறும் பயன் யாது	0—9—0
7	நமது பெரும் துரவஸ்தை—இது நீங்கும்வழி	0—3—0
8	கர்மநாசம்	0—3—0
9	சின்னங்கள்...	0—3—0
10	ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள் ...	0—3—0
11	ஸன்மார்க்க முறையும் சம்சாரமும் ...	0—3—0
12	மோக்ஷம் அல்லது வீடுபெறல் ...	0—3—0
13	ஸ்தூல பிரபஞ்சதர்மங்கள்—ஆத்மதர்மங்கள்	0—3—0
14	என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது	0—3—0
15	மகாலயபக்ஷமும் நவராத்திரியும் ...	0—1—0
16	காயத்ரி ராமாயணம்	0—1—0
17	காயத்ரி	0—1—0
18	சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம் ...	0—2—0
19	ஹிந்து என்பவன் எவன் ...	0—1—0
20	லோககுருவின் அவதாரங்கள்... ...	0—1—0
21	புத்த சரித்திரம்	0—0—6

தபால் சா

பூர்ணசந்ரே

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 9 | காளயுக்தி௵ தை௴ 1919௵ ஜனவரி௴ | பகுதி 9

பத்திராதிபர் பக்கம்.

சந்தா நேயர்களுக்கு அடியிற்கண்டபடி தெரிவித்துக் கொள்ளுகிறோம். அச்சாபீசில் சில அசௌகரியங்களால் இந்தச் சஞ்சிகையும் முந்திய விரண்டு சஞ்சிகைகளும் வெளிவரத் தாமதமாய் விட்டது. அதை நேயர்கள் மன்னிப்பார்களாக. இனிக் கூடிய சீக்கிரத்தில் துரிதம் பண்ணுகிறோம். காலத்தில் சஞ்சிகைகள் வெளியாகும் என்று எண்ணுகிறோம்.

நிற்க. நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகக் கைக்கொண்டிருக்கும் முயற்சிகளில் தேசியக்கல்வி யென்ற ஒரு முயற்சியே முதன்மையானது. அத்தேசியகல்வி முயற்சியின் ஆதரவின்கீழ் இந்தியச் சாரணர் சங்கம் ஒன்று ஏற்பட்டிருப்பது யாவரும் அறிந்த விஷயம். ஸர்க்கார் ஆதரவின் கீழ் சாரணர் சங்கம் ஒன்று ஏற்பட்டு இருப்பதையும் நேயர்கள் அறிவார்கள். ஆனால் இரண்டிற்குள் முன்னர்க் கூறியதில்தான் தேசவாழ்த்துப்பாடல்களும், தேசபக்தியும், மிகவும் நன்றாய்க் கற்பிக்கப்படுகின்றன. அதுவே எமது

மனதுக்கு உகந்தது. ஆகையால் அச்சங்கத்தார் வினய சம்பத்துடன் ஞானசம்பத்தையும் அடையும் வண்ணம் இந்தியச் சாரணர் சங்கம் (அதாவது இந்தியன் பாய்ஸ்கௌட் அஸ்ஸோஸியேஷன்) ஸ்கௌட்களுக்கு இப்பத்திரிகையை குறைந்த சந்தாவுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இப்பத்திரிகையில் சாரணருக்கு ஏற்ற வியாசங்கள் கதைகள், சமாசாரங்கள் அடிக்கடி வெளிவரும். நேயர்கள் அவ்விதக் கட்டுரைகளை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்தியச் சாரணர் எமக்கு அடியில் கண்ட குறிப்புகளுடன் ரூ 1—8—0 முன்பணமாக அனுப்பினால் அவர்களுக்கு 1 வருஷப்பத்திரிகை அனுப்பப்படும். அனுப்பவேண்டிய விபரங்களாவன. சாரணர் பேர், இந்த ஊரில் இந்த ட்ரூப்பைச் சேர்ந்தவர் இந்த, பெட்ரோலைச்சேர்ந்தவர், ஸ்கௌட்மாஸ்டர் பேர். ஸ்கவுட் மாஸ்டர் கையெழுத்துடன் எழுதினால் மிகவும் நலம். இந்த சௌகரியம் அடுத்த ஜூன் 30உ வரை உண்டு,

விருபம் கட்டுரைகள் தேவை.

நமது பத்திரிகைக்கு ஏற்ற விஷயங்கள், கதைகள், கட்டுரைகள் இவைகளை நேயர்கள் எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். விசேஷமாய் சிறுவர்கள் மாணாக்கர்களுக்கு ரஞ்சகமாயிருக்கும்படியான கட்டுரைகள் வேண்டும்.

தற்கால நிலைமை.

மைசூரைச் சேர்ந்த ஸ்ரீ சிருங்ககிரியில் சர்க்கார் பள்ளிக்கூடத்தில் கீழ் ஜாதிப்பையன்களையும் இதர ஜாதிப்பையன்களோடு வகுப்புகளில் சேர்த்தார்களாம்; அப்படிச் சேர்ந்து படிக்க மேல் ஜாதிக்காரர்கள் சம்மதிக்காமல் மேல்ஜாதியாருக்குமட்டும் உபயோகமாகும்படி ஒரு புதுப் பள்ளிக்கூடம் ஸ்தாபித்து அந்தப் பள்ளிக்கூடத்தை சர்க்கார் அங்கீகரிக்கவேண்டுமென்றும் அதற்கு உதவிப்பணம்

கொடுக்க வேண்டுமென்றும் மைசூர் ராஜாங்கத்தாருக்கு விண்ணப்பம் செய்து கொண்டார்களாம். அதற்கு அவ்விராஜாங்கத்தார் அப்புதுப் பள்ளிக்கூடத்தை அங்கீகரிப்பதில் யாதொரு ஆக்ஷேபணையும் இல்லையென்று உத்தரவளித்தார்கள். ஆனால் ஜனங்கள் எல்லாருக்கும் பொதுவான சர்க்கார்ப் பணத்திலிருந்து ஒருவகுப்பாருக்கு மட்டும் உபயோகப்படும் என்ற பள்ளிக்கூடத்திற்கு உதவிப்பணம் கொடுக்க முடியாதென்று மறுத்து விட்டார்கள் என்று தெரியவருகிறது.

***

திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் உள்ள பள்ளிக்கூடங்களில் 2048 பள்ளிக்கூடங்களில் புலையர் முதலிய ஜாதியாரை மற்ற ஜாதியாருடன் சேர்ந்து வாசிக்கிறார்களாம். அவைகளில் 1000 பள்ளிக்கூடங்களில் சென்ற வருஷம் தான் புதிதாகத் தீண்டா ஜாதிப் பையன்களைச் சேர்த்தார்களாம். அதற்கு விசேஷமான ஆக்ஷேபணைகள் நிகழவில்லை யென்று திவானவர்கள் கூறுகின்றார். காலத்தின் கதியை அனுசரித்து உலகத்தில் மாறுதல்கள் நிகழ்கின்றன. ஜனங்களும் காலத்துக்கு ஒத்து நடப்பார்கள் என்று தோன்றுகின்றது. தீண்டாஜாதிப் பையன்கள் பள்ளிக்கூடத்துக்கு வரக்கூடாதென்று பொதுசபையில் நின்று ஆக்ஷேபணை செய்யவே ஒருவரும் முன்வருவது வர வர சிரமமாகிவிடும் என்று தோன்றுகிறது. ஏன் என்றால் மற்றை நாடுகளில் இந்தியர்களைப் பொது இடங்களுக்கு வரக்கூடாதென்று தடுக்கும் விதிகளையும் சட்டங்களையும் ஆக்ஷேபிக்கும் நாம் இந்நாட்டில் அம்மாதிரியான விதிகளை ஊர்ஜிதப்படுத்த வேண்டும் என்று கூறுவது முடியாதன்றோ?

***

தமிழ் பாஷையில் தான் மாணக்கர்களும் பெரியவர்களும் தங்களுக்குள் தனித்தும், சபைகளிலும் பேசும் போது பேசவேண்டும் என்றும் ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதுவதும், சம்பாஷிப்பதும் சபைகளில் தங்கள்

அபிப்பிராயத்தை வெளியிடுவதும் சரிபல்லவென்றும் நம்மவர்கள் அனேகர் கூறியிருக்கிறார்கள். ஆனால் ஒரு உண்மையானது யாவருக்கும் தெரிந்ததானாலும் அதையே நம்மால் நன்கு மதிக்கப்பெற்ற ஒருவர் திரும்பவும் வற்புறுத்தினால் அதற்கு பிரயோஜனமில்லாமல் போகாது. மதுரை காலேஜ் தினமானது கொண்டாடப் பெற்ற பொழுது சகலரும் ஆங்கிலத்திலேயே பேசினார்கள். உலகத்தில் அன்னிய பாஷையை வழுவறப்பேசுவதில் நமக்கு நிகரில்லையென்பது நமக்குப் பெருமை யென்றல்லவா நாம் கொள்ளுகிறோம்? இருந்தபோதிலும் அப்பாஷையில் நாம் நம்முடைய பூரண அபிப்பிராயத்தையும் தெரிவிக்கமுடியாமல் திகைக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் அநேகர் இவ்வித தினங்களில் கூறும் வார்த்தைகள் பெரும்பாலும் பிரயோஜனமற்றவைகளாயும், மனிதர்களுடைய மனதைக்கவரக்கூடாதவையாயுமிருக்கின்றன. அன்று மாலையில் ஸ்ரீமான் ஸி. எப். ஆண்டுரூஸ் என்பவரை அழைத்திருந்தார்கள். அவரோ ஸ்ரீ மகாத்மா காந்தியடிகளிடமும், டாக்டர் ஸர் ரவீந்திரநாத டாகூரிடமும் அபாரபக்தியும் பற்றுதலும் உடையவர். இவ்விரு மகான்களும் சுவபாஷையிலேயே பேசவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர்கள். ஆகையால் ஸ்ரீமான் ஆண்டுரூஸின் அபிப்பிராயமும் அப்படியே. மாணாக்கர்களுக்குச் சிற்சில வார்த்தைகளைச் சொல்லும்படி அக்கிராசனர் ஸ்ரீமான் ஆண்டுரூஸை வேண்ட, அவர் இவ்விதமான கூட்டங்களில் தாய் பாஷையிலேயே சகலமான பேச்சுகளும் நிகழ வேண்டும் என்று வினயத்துடன் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். அந்த சமயம், கூட்டத்திலிருந்த அனைவரும் கரகோஷம் செய்தார்கள். அப்பால் அக்கிராஸனராயிருந்த ஸ்ரீமான் கிருஷ்ணய்யங்காரவர்களும் தமிழிலேயே முடிவுரை கூறினார்கள். அவர்கள் ஆங்கிலத்தில் விற்பன்னர் தான். ஆனால் அவரது தமிழ்ப்பேச்சானது ஆங்கிலப்பேச்சைவிட மிகவும் சிலாக்கியமாகவே யிருந்தது. ஆகையால் இனி இம்மாதிரியான

மாணுக்கர் சபைகளிலும் பெரியோர் சபைகளிலும் தமிழ் பாஷையிலேயே பேசுதலானது வழக்கமாகும் என்று நாம் நம்புகிறேம்.

***

டாக்டர் ஸர் ரவீந்திரநாத டாகூரைத் தெரியாதவர் உலகத்தில் கிடையாதெனலாம். நோபல் பரிசுகிடைப்பதென்றுல் சாதாரணமா? உலகத்தாரால் ஒப்புக்கொண்டு நன்கு மதிக்கப்பெற்றவருக்குத்தான் அப்பரிசு அளிக்கப்படும். ஆகையால் அப்பரிசு கிடைத்தது முதல் ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களில் இம்மகானுடைய கியாதியானது பரவிற்று. ஆகையால் உலகம் போற்றும் மகானைப் பார்க்கவேண்டும். என்ற ஆவலானது மதுரை வாசிகளனை வருக்கும் மிகுந்திருந்தது. மதுரைக்கு ரவீந்திரர் வரப்போகிருர் என்று தெரிந்தது முதல் அவரது வரவை ஜனங்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருந்தார்கள்.

***

மதுரை அமெரிக்கன் காலேஜ் உபந்யாஸ மண்டபத்தில் அக் காலேஜ் அதிகாரிகளுடைய ஏற்பாட்டின் பேரில் 3 உபந்யாசங்கள் கவீந்திரரால் செய்யப் பட்டன. அரண்யத்தின் உபதேசம் என்பது முதல் உபந்யாசத்தின் மகுடம். இந்தியாவில் சாதாரண ஜனங்களின் சமயத்தின் தாத்பரியத்தைப்பற்றி இரண்டாவது உபந்யாசம் இந்தியாவில் வித்யையை பற்றி மூன்றுவது உபந்யாசம் நிகழ்ந்தது.

***

கவீந்திரருக்கு சுமார் 60 வயது ஆகிறது. சரீரமோ மிகவும் ஸுகுமாரம். அவரது சுபாவமோ மிகவும் தாக்ஷிண்யப்பட்டது. ஆகையால பற்பல நகரங்களில் தங்கியிருந்த போது தாக்ஷிண்யம தட்ட முடியாமல் அதிகமாக அலைச்சல் ஏற்பட்டதினுல் மதுரையில வந்த உடன் கொஞ்சம் தேக அசௌகரியம் ஏற்பட்டது. ஆகையால இவ்விடம் சிலநாள் தங்கியிருந்து சிரமபரிகாரம் செய்து கொள்ள வேண்டி ஏற்பட்டது. முழுவதும் அசதியானது

தீராததால் திருநெல்வேலி திருவாங்கூர் முதலிய இடங்களுக்குப் போவதாக உத்தேசித்திருந்தபடி போகமுடியவில்லை. மதுரையிலிருந்து திரும்பி வடக்கே மதனப்பள்ளிக்குத்திரும்பிப் போய் விட்டார்

***

21-2-19ல் மதுரை முனிசிபாலிடியார் கவீந்திருக்கு ஒரு உபசாரப் பத்திரிகை படித்து அதை அழகான பித்தளையில் வேலைப்பாடுள்ள ஒரு கைப் பெட்டியில் வைத்துக் கொடுத்தார்கள். அதை ஏற்றுக் கொண்டு கவீந்திரர் வந்தனமளித்தபோது கவிகளுக்கு இவ்வளவு விமர்சையாக பொது சபைகளில் உபசாரங்கள் சொல்வது யுக்த மில்லையென்றும் கவிகள் உலகப் புகழ்ச்சியை எதிர் பார்க்கும்படி தூண்டுதல் கவிதைக்கு சிலாக்கிய மில்லையென்றும் அடக்கத்துடன் கூறினர். யாவரும் கவீந்திரரைக் கண்டு ஆனந்தித்தார்கள். அவரது இனிமையான தீங்குரலைக் கேட்டு உள்ளம் பூரித்தார்கள், அவையடக் கத்தைக் கண்டு வியந்தார்கள். முனிசிபாலிடியார் கவீந்திரருக்கு வந்தனோபசாரப் பத்திரிகை வாசித்தது முதல் முதல் இந்த ஊரில தான். இதுமிகவும் பொருத்தமானகாரியம். உத்யோக தோரணையில்வரும் கவர்னர், ராஜப்பிரதிநிதி இவர்களுக்குத்தான் இவ்வித உபசாரம் செய்வது இதுகாறும் வழக்கமாயிருந்தது. உலகப் பிரசித்தி பெற்ற இம்மகானுக்கு உபசாரம் சொல்ல முன்வந்தது மதுரை முனிசிபாலிடிக்கே கௌரவமாகும். பிரக்கியாதி பெற்ற பெரியோர்கள் மேல்நாடுகளில் பெரிய நகரங்களுக்குச் சென்றால் அந்த நகரங்களின் முனிசிபாலிடியார் இவ்வித மான மரியாதை செய்வது வழக்கமா யிருக்கிறது யென்பதை யாவரும் அறியலாம். ஒரு நகரமானது ஒருவரை மரியாதை செய்ய வேண்டு மென்று எண்ணினால் அம்மரியாதையைச் செய்வதற்கு நகரவாசிகளின் பிரதிநிதிகளடங்கிய சபையை விட யாருக்கு உண்மையான உரிமை யுண்டு?

***

கவீந்திரருக்கு உதவியாய் அவருடன் கூடவந்த ஸ்ரீமான் ஆண்டுரூஸ் மூன்று உபந்யாசங்கள் செய்தார். ஒருநாள் கவீந்திரரால் போல்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சாந்திநிகேதனம் என்ற பள்ளிக்கூடத்தைபற்றியும், மறுநாள், ஸ்ரீமான் மகாத்மா மோஹனதாஸ் காந்தியவர்களைப் பற்றியும் மற்றொருநாள் ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண கோகலேயவர்களைப் பற்றியும் பிரசங்கம் செய்தார்.

***

ஸ்ரீமான் ஆண்டுரூஸ் கிறிஸ்தவர். முன்பு கிறிஸ்தவப் பாதிரியாக இந்தியாவுக்கு வந்திருந்தார். அப்பால் பாதிரிவேலையை மட்டும் விட்டுவிட்டார். அவர் இன்னும் கிறிஸ்தவர் தானானாலும் சமரஸபாவம் பொருந்தியவர். அவர் மகாத்மா காந்தியடிகளையும், கவீந்திரரையும் மிகவும் பக்தியுடன் அனுசரிப்பவர். இப்போது போல்பூர் சாந்திநிகேதனத்தில் உபாத்தியாயராய் இருக்கிறார். கவீந்திரருடன் காரியதரிசியாக அவருக்கு உதவிபுரிந்து வருகிறார். இவரது பக்தியும் அடக்கமும் யாவரும் போற்றத் தகுந்தவையாகும்.

***

கவீந்திரருடைய உபந்யாசங்களின் பெருமையையும், ஆழ்ந்த கருத்தையும், சொல்லணியையும், அர்த்த புஷ்டியையும், உபமானங்களின் பொருத்தத்தையும், அவர்கள் அவ்வுபந்யாசங்களை வாசிக்கும்போது சுரோதாக்கள் அனுபவித்த ஆனந்தத்தையும், எம்மால் கூறிமுடியாது. அடிக்கடி அவரது பாதசேவை செய்துகொண்டு அவரது அன்புக்குப் பாத்திரர்களாய் நிரந்தரம் அவரது திருவாக்கினின்று கதைகள் ரூபமாயும், நாடகரூபமாயும், கவிகள் ரூபமாயும், கானங்கள் ரூபமாயும், இனிமையான வங்கபாஷையில், பயிற்சிபெறும் பாக்கியம் பெற்ற சாந்திநிகேதன மாணாக்கர்கள் பாக்கியமே பாக்கியம். அவ்வித பாக்கியத்தைப்பெற்றிலமே யென்ற ஏக்கமானது கவீந்திரரைப் பார்த்து அவரது வாங்மாதுரியத்தைச்செவிகளால் பருகும் பாக்கியத்தை ஒருதடவையாவது பெற்றவர்களுக்குண்டாகாமல் போகாது.

ஆர். ரெங்கஸாமி ஐயர்.

சாரணர் பக்கம்.

பிரவேசம்—சாரணர் தலைவரும், மாணாக்கனும்.

மாணாக்கன்:—ஸ்வாமி நமஸ்காரம்.

சாரணர் தலைவர்:—நமஸ்காரம், என்ன சமாசாரம்.

மாணாக்கன்:—தங்களை நான் சில சமாசாரம் கேட்க விரும்புகிறேன் கேட்கலாமா?

சா. த:—அவசியம் கேள். எனக்குத் தெரிந்தால் அவசியம் சொல்லச் சித்தமாயிருக்கிறேன்.

மா:—தாங்களும் தங்களுடன் நேற்று தெப்போத்ஸவத்தில் கூட்டத்தை விலக்கிக்கொண்டிருந்த வாலிபர்களும் ஒரே விதமான உடையைத் தரித்துக்கொண்டிருந்தீர்கள். இன்னும் சிற்சில அடையாளங்களை போட்டுக்கொண்டிருந்தீர்களே அவைகள் எல்லாம் எதற்காக?

சா. த:—அவ்வாலிபர்கள் எல்லாம் இந்தியச் சாரணர்கள், நான் தான் அவர்கள் தலைவன். சாரணர்கள் என்பதையும், அவர்களுடைய தலைவர் என்பதையும், காட்டுவதற்காகத்தான் ஒரே மாதிரியான உடை தரித்துக் கொண்டும், அடையாளங்கள் போட்டுக் கொண்டும் இருந்தோம். அந்த மாதிரி உடைதரிப்பதால் சில சௌகரியங்களும் உண்டு.

மா:—இந்தியச்சாரணர் என்ற கோஷ்டி சேருவதின் பிரயோஜனம் என்ன? எதற்காக வாலிபர்கள் சாரணர்களாகச் சேரவேண்டும்? சாரணர் சங்கத்தின் நோக்கம் என்ன?

(275-ஆம் பக்கம் பார்க்க.)

பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)

39-வது அத்தியாயம்

நூதனசரீரங்களில் ஜீவனுடைய வாழ்க்கை. (தொடர்ச்சி)

நூதனசரீரங்களில் ஜீவனுடைய வாழ்க்கையில் நேரும் சம்பவங்களைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளும் போது அந்த ஜீவதசையில் நாம் அனுபவித்துத் தீர்க்கவேண்டிய பழைய கர்மத்தின் ஒருபாகத்தைப்பற்றி யோசிப்போம்.

வெகு ஜன்மங்களுக்கு முன் நம்முடைய ஜீவன் மிருகத்தன்மையுள்ள அடக்கமுடியாத பலமான காமக்குரோதங்களுள்ளதாயும் இருந்தபோது நாம் காட்டுத்தனண அநேக குரூரமான காரியங்களைச் செய்தும் மாநம் தோழர்களான அநேக ஜீவர்களுக்குத்தீமை செய்துமிருப்போம். இந்த ஜன்மத்தில் முன்செய்த தீமைகளுக்குப் பிரதியாக அன்பையும் பக்ஷத்தையும் காட்டும்படியாயும், நாம் அபகாரம எவர்களுக்தச் செய்தோமோ அவர்களுக்கு உபகாரம் செய்யும்படியாயும், நாம் யாரை விரோதித்தோமோ அவர்களை நேசிக்கும்படியாயும், தகுந்த சந்தர்ப்பங்களுடனும் நல்ல சரீரங்களுடனும் பிறந்திருக்கிறோம்.

நாம் எவர்களுக்கு இவ்விதம் பக்ஷத்தையும் சாந்தத்தையும் உதவியையும் அன்பையும் பாராட்டவேண்டுமோ அவர்கள் உலகத்திற் பல இடங்களில் சிதறியிருக்கலாம். சிலர் விகாசமுறையில் நம்மிலும் மேலான பதவியை அடைந்திருக்கலாம். சிலர் நமக்குச் சமமானவர்களாகவும் வேறுசிலர் முன் ஜன்மங்களில் நம்மால் நடத்தப்பட்ட காரணங்களால் நம்மிலும் தாழ்ந்தவர்களாகவு மிருக்கலாம். இந்த ஜனங்களில் அநேகர்களுக்கு நாம் சரீரமூலமாய் அநேக கடன்கள் செலுத்த வேண்டியிருக்கும். அதாவது எவ்விதத்தில் இழைத்தோமோ அவ்விதத்தில் அனுபவிக்க வேண்டி வரும இப்படிக் கடன்களைச் செலுத்துவதற்கு அநேகஜன்மங்கள் எடுக்கவேண்டியிருக்கும்.

கர்மதேவதைகள் இதையெல்லா மறிவார்கள். நாம் பூமிக்குத் திரும்பிவந்து நூதனசரீரங்களில் வாழ்க்கைக்கு ஆரம்பிக்கும்போது நாம் கடன்கொடுக்கவேண்டிய ஜனங்களில் அதிகமானபேர்கள் இவ்வுலகில் எந்தபாகத்தில் வந்து பிறந்திருக்கிறார்களோ, அந்த இடத்துக்கு நம்முடைய சரீரங்கள் தகுதியாயிருந்தால் நம்மைப்பிறக்கும்படி யனுப்புவார்கள். ஆனால் சிலசமயம் அவ்விடங்களில் நமக்குவேண்டிய ஸ்தூலச் சரீரங்களைக் கொடுக்கக்கூடிய பெற்றோர்கள் இருக்கமாட்டார்கள். அப்போது கர்மதேவதைகள் நம்மை வேறிடங்களுக்கு அனுப்பக்கூடும். அங்கே பழய தோழர்களில் இரண்டொருவரை மட்டும் நாம் சந்திக்கக் கூடும். அப்படி நேரும்போது சஞ்சித கர்மத்தில் கொஞ்ச பாபத்தை மட்டும் நாம் தீர்த்தும் நூதனகர்மங்களைச் சேகரித்தும் நூதன பாடங்களைக் கற்றுக்கொண்டும் அந்த ஜன்மத்தைப் போக்குவோம். இந்தக் காரணத்தினாலே தான் ஒரேமனிதனுடைய பலஜன்மங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன.

ஒரு ஜீவனுடைய எல்லா ஜன்மங்களும் சேர்ந்து ஒரு பெரிய வருஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது. ஒவ்வொரு ஜன்மமும் அவ்வருஷத்தில் ஒரு தினத்துக் கொப்பாகும். சில தினங்கள் நன்மையாயும் சிலதினங்கள் கெடுதலாயுமிருக்கின்றன. அதாவது சந்தோஷமாயிருக்கிற தினங்களும் துக்கமுள்ள தினங்களுமா யிருக்கின்றன.

நாம் செய்ததும் பேசினதும் நினைத்ததும் இச்சித்ததுமான ஒவ்வொரு விஷயத்தையும் கர்மதேவதைகள் அறிவார்கள். ஒன்றையும் மறந்து போகவும் அல்லது இழந்துபோகவும்மாட்டார்கள். ஒவ்வொரு விஷயமும் நமக்கு சந்தோஷத்தை அல்லது துக்கத்தைக் கொடுக்கத் திரும்பிவருகிறது. சஞ்சிதகர்மத்தில் எவ்வளவு பாகத்தை நாம் பொறுப்போமென்பதையும் எவ்வளவு பாகத்தை நாம் திருப்பிக் கொடுப்போமென்பதையும் கர்மதேவதைகள் அறிவார்கள். குவிந்து கிடக்கிற சஞ்சித கர்மத்திலிருந்து சொற்பபாகத்தை எடுத்து ஒவ்வொரு ஜன்மத்திலும் அதைக்கழித்துக்கொண்டு வரும்படியாக, கர்மதேவதைகள் நமக்கு அனுக்கிரகம் செய்கிறார்கள்.

இவ்விதமாய் நாம் எந்தவொரு ஜன்மத்திலாவது ஜாக்கிரதையாயிருந்து நன்மையான காரியங்களைச்செய்து நம்மால் கூடியவரை கற்றுக்கொள்ள வேண்டியவைகளைக் கற்றுக் கொண்டும் நமக்கு சம்பவிக்கும் எவ்விஷயமும் நியாயமாய்க் கிடைத் திருக்கிறதென்றும் நன்மையானதென்றும் நினைத்து அதைப்பற்றி வருத்தப்படாமலும் மனம் சலிக்காமலும் இருப்போமாகில் சஞ்சிதகர்மத்தை நாம் குறைத்துவிடுவது மன்றி நூதனமாய்க் கெட்ட கர்மத்தைச் செய்யவும் மாட்டோம்.

ஒருவிஷயம் சரியோ தப்போவென்று நினைத்துப் பார்க்கக்கொஞ்சம்கூட அவகாசமில்லாதபடி திடீரென்று அக்காரியத்தை சிலசமயம் செய்துவிடுகிறோம். எப்படி நம்முடைய கண்ணில் தூசி முதலானது விழுமுன்னே இமைகள் அதைத்தாமாகவே மூடிக்கொள்ளுமோ அப்படியே சிலகாரியங்களை நமக்குத் தெரியாமலே நாம்செய்துவிடுவோம். திடீரென்று ஒருவன் நம்மை பயமுறுத்தினால் அவனை நாம் சடுதியில் அடிப்போம் அல்லது சமீபத்திலுள்ள வேறொருவனைக்கூட கொன்றுவிடுவோம். நாம் வேறொருவனைக் கொல்லவாவது அவனுக்குத் தீங்குசெய்யவாவது கொஞ்சமும் எண்ணவில்லை. அப்படியிருந்தும் அக்காரியத்தைநாம் செய்துவிடுவோம். திடீரென்று செய்யப்பட்ட இவைபோன்ற செய்கைகள் நாமறியாமல் செய்யும் கருமங்களாம். இவைகளுக்கு முதிர்ந்த அல்லது பிராரப்த கர்மமென்று பேர். ஆனால் நாம் செய்யும் காரியம் சரியா தப்பாவென்று ஆலோசிக்க நமக்கு ஒருவிநாடி நேரமாவது அவகாசமிருக்குமாகில் அதற்கப்பால் செய்யும் காரியமானது முதிர்ந்த கர்மமாகமாட்டாது. அதைச் செய்பவன் நூதனகர்மம் செய்தவனாகிறான். அது நன்மையாயிருந்தாலும் கெடுதலாயிருந்தாலும் அந்தக்கடனைத்திருப்பிச் செலுத்தவேண்டியவனாயிருப்பான். எந்த ஜன்மத்திலாவது இவ்வித முதிர்ந்த கர்மம நேருவது மிகவும் துர்லபம்.

வி. வெங்குசாமி ஐயர்,

பகவத் ஸ்துதி.

சகோதரர்களே! நாமெல்லோரும் பிரபஞ்சத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறோம். எவ்விதம் வளர்கிறோமோ கவனியுங்கள். நாம் உண்ணும் உணவு சரீரத்தில் ஜீர்ணமாகி, மாம்ஸம், ரக்தம், கொழுப்பு, முதலாயுள்ள சரீராம்சங்கள் வளர்வதற்கு உபயோகப்படும். அவ்விதம் நாம் ஒரு தடவை உட்கொள்ளும் உணவு ஜீரணமானபின்னர் மீளவும் நாம் உணவை உட்கொள்ளுவோம். அதுவும் முன்போலவே மாம்ஸம் முதலாயுள்ள வற்றைப் பலப்படுத்துவதற்கு உபயோகமாகும். நமது ஜீவயாத்திரையும் அவ்விதமே. பூலோகத்தில் நாம் செய்யும் கார்யங்களில் சில நல்லவையாயும் இன்னும் சில கெட்டவையாயுமிருக்கும். அக்கார்யங்களின் அனுபவங்களை இறந்த மனிதன் கூடவே கொண்டு காமலோகத்திற்குச் செல்வான். அங்கு அவன் பூலோகத்தில் செய்த கெட்ட கார்யங்கள் மூர்த்தீகரித்துக்காணப்படும். பிரஹ்மஹத்தியை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். காமலோகத்தில் திரிந்து தானெந்த பிராமணனைக் கொன்றானோ அப்பிராமணன் அவனுடைய சிநேகிதர்களுடனும் பந்துக்களுடனும் தென்படுவான். தான்ஹத்தி செய்ததற்காக அவர்களெல்லோரும் கூடித்தன்னை தண்டித்துக்கொண்டிருப்பதையும், தானும் செய்யத்தகாத வேலையைச் செய்ததற்காக இது பலனென்பதாகவும் அறிந்து விசேஷ துக்கத்திற்கு உள்ளாவான். நான் இனி எப்பொழுதும் இவ்வித துஷ் காரியத்தை செய்யேனென்பதாக நிச்சயம்செய்துகொளவான். இவ்விதமே தான்செய்த பாப கார்யங்கள் எல்லாவற்றினுடைய பலன்களை அனுபவித்து இனி பூலோகத்தில் மீளவும ஜனிக்கும்பொழுது திரும்பவும் அவ்வித பாபகார்யங்களைச் செய்வதில் பாராமுகமாயிருத்தல் என்ற ஸமஸ்காரத்தைச் சம்பாதிப்பான். இவ்விதம் துஷ்ட கார்யங்களால் உண்டான துக்கத்தை கிரஹித்து சுவர்க்க லோகத்திற்குச் சென்று அவ்விடம் புண்ய கார்யங்களால்

உண்டாகும் சுகத்தைப் பார்த்து ஆனந்தித்து இனியும் வரும் ஜன்மத்தில்புண்யகார்யங்களை இன்னும் ஜாஸ்தியாகச் செய்வதற்கு ஸம்ஸ்கார பீஜங்களைச் சம்பாதிப்பான். அவ்விதம் ஒவ்வொரு புண்யத்தின் லேசமும், பிரதிபலனை உத்தேசித்த புண்யமாகட்டும், அபேக்ஷையின்றிச் செய்த புண்யகார்ய மாகட்டும், பிரதிதினமும் சுகஹேதுவென்பதாகவும், அதில் பிரதிபலத்தை அபேக்ஷியாது செய்த புண்யகார்யங்கள் விசேஷ சுகத்தை யளிக்கக்கூடியவைகளென்பதாகவும் அறிந்து அனுபவங்கள் எல்லாவற்றையும் ஸம்ஸ்காரங்களாக மாற்றிக்கொண்ட பின்னர் திரும்பவும் பூலோகத்தில் ஜனிப்பான். இவ்விதம் திரும்பத் திரும்ப ஜன்மங்களை எடுத்து தெய்வ சக்திகளைப் பலப்படுத்திக் கொண்டு வருவான். இதையே புனர்ஜன்மமென்பார்கள். இந்த பூலோகத்தில்கூட அவ்வித துஷ்கார்யத்தில் பாராமுகத்தையும் புண்யகார்யத்தை அனுஷ்டிக்கும் சாமர்த்தியத்தையும் ஸத்ஸஹவாஸத்தாலும் நல்ல கிரந்தங்களைப் படிப்பதாலும் நாம் சம்பாதிக்கவேண்டும். தெய்வசக்திகள் எல்லாவற்றையும் சீக்கிரத்தில் சம்பாதிக்கவேண்டும். அவ்விதம் சக்திகள் எல்லாவற்றையும் சம்பாதித்துப் பரமசுகத்தை அனுபவிப்பதற்கு நாம் துரிதப்பட்டால் நாம் அவ்விதம் செய்யலாமாதலால் அவ்விதம் நாமெல்லோரும் முயற்சித்து பிரவிருத்திப்போமாக.

பகவான் நமக்கவ்வித புத்தியைப் பிரதி நிமிஷமும் உண்டாக்குவாராக. நம்மை அவர் பரிபூரண கடாக்ஷத்தோடு ரக்ஷிப்பாராக.

சகோதரர்களே!

நாம் பிறந்தும் இறந்தும் காமலோகம் ஸவர்க்கலோகம் பூலோகங்களில் திரிந்து கொண்டிருக்க, நமது சக்திகள் விருத்தியடையுமென்பதைத் தெரிந்துகொண்டோம். அவ்விதம் அனேக முறைகள் பிறந்து இறப்பதால் நமக்கென்ன தோன்றும்? இந்த ஸ்வர்க்கலோக சுகங்கள் சாசுவத

மானவைகள் அல்லவென்பதாகவும் எத்தனை முறைகள் நாம் எவ்வளவு உத்கிருஷ்டமான புண்யகார்யங்களைச் செய்யினும் நமக்கெவ்வித ஸ்வர்க்கலோக சுகம் ஏற்படினும் திருப்தியில்லாதிருக்கு மென்பதாகவும் தெரியவரும்.

இவ்விதம் தெரியவருவதால் இந்தலோக சௌக்கிய ங்களிடத்தும் ஸ்வர்க்கலோக சௌக்கியங்களிடத்தும் கூட விரக்தியுண்டாகும். ஆகையால் நமக்கு சுகாபேக்ஷையில்லாமலே பிரவிருத்தித்து துக்கநாசம் ஒரு ஆவிருத்தியானல் மீளவும் துக்கமானது உண்டாகாதிருக்கக் கூடிய ஸ்திதிக்கு மார்க்கத்தைத் தேடுவதற்கு வேலைசெய்வோம். அவ்வித வேலைகளுக்கு தெய்வ சக்தி துணையாயிருந்தால் நாம் செய்யும் வேலைகள் சுலபமாகும்.

ஸ்வார்த்த சிந்தை அல்லது பலாபேக்ஷையில்லாத வேலைகள் நமக்குப் புனர் ஜன்மத்திற்குக் காரணங்களாகா. அவ்வித வேலைகளைச் செய்வதற்கு வைராக்கியம் உண்டாவதற்குமுன்பே நாம் அப்பியஸித்திருப்போமாகையால் அவ்வித வேலைகள் செய்யும்பொழுது பகவான் துணையானபடியால் நாம் எச்சரிக்கையோடு அவைகளைச் செய்வோம். அவை புனர் ஜன்மத்திற்குக் காரணங்களன்று. அவ்வித வேலைகள் கிரமக்கிரமமாய் நாமெல்லோரும் சகோதார்களென்ற புத்தியையும் பகவான் பிரபஞ்சத்தில் எங்கும் நிறைந்திருக்கிறார் என்ற புத்தியையும், தானே பகவான் என்ற புத்தியையும், உண்டாக்கி வைத்து முடிவில் அளவிடப்படாத சுகங்களை யளிக்கும். ஜகதீசுவரா! அவ்வித புத்தி எங்களுக்குச் சீக்கிரத்தில் உண்டாகும்படி அனுக்கிரகஞ்செய்யும். ரக்ஷியும்! ரக்ஷியும்! ரக்ஷியும்! எங்களைச் சுற்றிலும் எங்களுக்குள்ளும் புறமும் எல்லாப்பக்கங்களிலுமுள்ள அந்தர்யாமி நீரே. ஜீவர்களான நாங்கள் அஞ்ஞானத்தில் செய்த மூடகார்யங்கள் எங்களைப்பந்தித்துக் கொண்டிருக்க நாங்கள் பிறந்தும் இறந்தும் ஸம்ஸார அந்தகாரத்தில் அழுந்தினவர்களாய்த் திகிலடைந்து கொண்டிருக்க

பிரளயத்தில் எங்களை அழுத்தித் தூங்கவைத்து விசிராந்தியடையக்கூடியதாய் அனுக்கிரகித்துக்கொண்டிருக்கிறீர். இவ்விதம் நீர் ஏற்படுத்திய பிரளயம் கூட ஜீவாகளிடத்துள்ள தயையினுல் மாத்திரமன்றோ? திரும்பவும் நீர் அவர்களின் கர்மங்கள் பரிபாகத்தையடைந்து அவர்கள் அவற்றை அனுபவிக்கவேண்டி சிருஷ்டியைச் செய்கின்றீர். இவ்விதம் பரமதயாபரனுன உம்மை நாங்கள் கண்டு கொள்வதே எங்களுக்கு வேண்டும். அவ்விதம் உம்மைப் பார்ப்போமாகில் எங்களைப்பந்திக்கும் கார்யங்களை ஒழித்து பலாபேட்சை யில்லாமலே கார்யங்களைச் செய்ய ஸமர்த்தர்களாவோம். அப்பொழுது எங்களுக்கு ஜனன மரண ரூபமான ஸம்ஸாரம் முடிவு பெறும். அவ்வித நிஷ்களங்க ஸேவையை எப்பொழுது நாங்கள் செய்வோமோ அந்த ஸமயம் சமீபித்துமாக! ஸேவார்த்தமே ஸேவை, பிரேமார்த்தமே பிரேமை, ஞானர்த்தமே உபதேசம் என்பதாக எப்பொழுது ஸாமான்யமாய் நாங்களெல்லோரும் செய்யக்கடவோமோ அவ்வித சமயம் எங்களுக்குப்பிரார்ப்தமாகுக! எங்கள் முறையிடுதலைக் கேட்டு எங்களை அனுக்கிரகிக்கவேண்டிக்கொள்ளுகிறோம். எங்களுடைய மூடத்தனத்தை சீக்கிரத்தில் விலக்கும். ரக்ஷியும். ரக்ஷியும். ரக்ஷியும்.

ஹே மஹாப்ரபோ! நீர் ஸர்வாந்தாமியாய் இருக்கிறீர். நாங்கள் விவேகமற்றவர்களாகி தேஹாத்ம ஞானம் உடையவர்களாயிருக்கிறோம். எங்கள் சரீரங்களே நாங்களென்பதாக நினைக்கிறோம். எங்கள் சரீரங்கள் நாங்களல்லவென்பதாக நாங்கள் ருசுப்பார்த்துக்கொள்ளலாம். நான் பிரதிதினமும் விடிந்த பிறகு எழுந்திருக்கினும் நாளை நான் விடியுமுன் இருட்டில் எழுந்திருக்கவேண்டுமென்பதாக சங்கற்பம் செய்வேனேயாமாயின் நான் அவ்விதம் எழுந்திருப்பதற்கு சரீரம் சித்தமாகவேயிருக்கும். என் சரீரம்எப்பொழுதும் தனக்கு வேண்டியதை எனக்கு வேண்டியதாகத் தோற்றுவிக்கும். எவ்விதமெனின் தன் கண்களுக்கு நாடகம் பார்க்கவேண்டுமென்பதாக இருக்குமாகில் எனக்கே

அது வேண்டுமென்பதாகத் தோற்றுவிக்கும். அதன் சுகத்திற்குத்திரவியம்வேண்டுமோயின் எனக்கே திரவியம்வேண்டுமென்பதாகத் தோற்றுவித்து, என்னை மோசம் செய்யும். ஆகையால் சரீரம் அவ்விதம் எனக்குத்தோற்றுவிக்கும்பொழுது நான் நிச்சலனமுள்ளவனாகி எனக்கது வேண்டுமா அல்லது சரீரத்திற்காவென்று யோஜித்து எனக்கு வேண்டியிருக்கின் அதைச்செய்யவேண்டும். இவ்விதம் ஆத்மா சரீரமல்ல வென்பதாகத்தெரிந்து கொள்ளக்கூடும். மேலும் சரீரம்நமக்கு குதிரையைப்போன்ற வாகன மானதால் அதை நமக்கு வேண்டிய வேலைகளைச்செய்யும்படி அதைப்பழக்க வேண்டும். நமக்கு வேண்டியவையே பகவானுக்கும் வேண்டியவை. அந்த பகவானுடைய இச்சையானது நாம் ஒருவரோடொருவர் அன்யோன்யமாயிருந்து சுகிப்பதே யொழிய வேறு அன்று. உபகாரத்தையும் பலாபேக்ஷையையும் எதிர்பாராமல் நமது சரீரம் சிரமத்தைப்பாராட்டாமல் நாம்சொல்வதை செய்யும் வண்ணம் நமது சரீரத்தைப் பழக்கவேண்டும். அவ்விதம் செய்வதற்குப் பலத்தையளிக்கும்படி பரமாத்மாவைப்பிரார்த்திப்போம். ஹே பராத்பரா! எங்களுக்கு எப்பொழுதும் பரோபகார சித்தத்தை உண்டாக்கும். பரோபகாரத்தை எப்போதும் நாங்கள் செய்வதற்கு தேக பலத்தைக்கொடும். நமஸ்தே. நமஸ்தே. நமஸ்தே நம:

ஹே ஸர்வக்ஞா! நீர் எங்கும் நிறைந்திருக்கிறீரென்றும் உமக்கெல்லாம்தெரியுமென்பதாகவும் நாங்கள் நினையாமல் அந்தகாரத்தை வெளிச்சமென்பதாகவும் தெரியாததைத்தெரியுமென்றும் எண்ணி நாங்களே ஸர்வக்ஞர்களென்பதாக எண்ணி வருகிறோம். நிற்க, நான் யார் என்றே எனக்கே தெரியாமலிருக்கிறது. சரீரம் நானல்லவென்று தெரிந்தாலும் மனம நானென்ற அஞ்ஞானம் ஒழியவில்லை. இருக்கட்டும். நன்றாய் ஆலோசிக்கின், தர்க்கத்தால் நான் என்னுடைய மனதல்ல வென்பதாகத் தோன்றக்கூடும். அது எவ்விதமெனின் சொல்லுகிறேன்:— என்மனம் தற்காலம் நான் செய்து கொண்டிருக்கும் வேலையைவிட்டு

வேறொரு கிராமத்தில் உள்ள விஷயங்களை ஆலோசித்துக் கொண்டிருக்கும் பொழுது நான் அதை நிக்கிரஹித்து மனதை மீளவும் என் வேலையில் பிரவேசிக்கச் செய்வேன். இவ்விதம் கிரஹிக்கக்கூடியதும் திருப்பக்கூடியதுமான என் மனம் வேறு நான் வேறெனத் தர்க்கத்தால் கிரஹிக்கினும், சிறிது காலம் வரை நான் என்மனமேயென்றெண்ணும் பிரமை உடனே ஒழிவடையாமலிருக்கிறது. ஹே ஸர்வேசுவரா! உமது சக்தி அபாரமானபடியால், அவ்வித பிரமையை விட்டொழிப்பதற்கு மனோதைரியத்தை அளித்து எங்களைக் காப்பாற்றும். இவ்விதமாகினும் எங்கள் மனங்கள் எங்கள் அதீனமெனபதாக அறிந்து மனங்களிடத்து அனுசிதமான சிந்தையில்லாமல் மனங்களைத் திடப்படுத்திக்கொண்டு பரோபகார சிந்தையில் அமரக்கூடியதாய் நாங்கள் எங்கள் மனங்களை சிக்ஷிப்போமாக. அவ்விதம் எங்கள் மனங்கள் நல்ல எண்ணங்களால் நிறைந்து எங்களுக்கனுகூலமாகவிருந்து சுகப்பிரவாகம் உண்டாகும் வண்ணம் எங்களை அனுக்கிரஹம் செய்யும். ரக்ஷியும். ரக்ஷியும். ரக்ஷியும்.

ஹே ஸர்வேசுவரா! நீரே ஸர்வக்ஞன், அத்விதீயன், என்பதாகத் தெரிந்து கொள்வதற்கு சந்தேகங்கள் ஜனித்து வருகின்றமையால் நாங்கள் எங்கள் மூடத்தனத்தை விரட்டி ஓட்டமுடியாமலிருக்கின்றோம். அத்விதீயனும் சிருஷ்டி கர்த்தாவுமான உம்மிடமிருந்தே பிரபஞ்சத்தில் உள்ள ரூபங்கள் உண்டாகின்றன. பிரபஞ்சமெவ்விதம் உண்டாகின்றது என்பதிலும் சந்தேகம ஜனிக்காமல இராது. அவைகளை நிராகரித்துத் தத்துவத்தை யறிந்தவர்கள் இவ்விதம் சொல்லுகிறார்கள். ஒரு மண்ணினின்று கடங்கள், முடக்குகள், கலசங்கள் முதலான அநேக வஸ்துக்கள் வெளிப்படும் விதமே அத்விதீயனான உம்மிடமிருந்து அனேக விசித்திர பேதங்களுள்ள பிரபஞ்சம் வெளிப்படுகின்றது என்பதாகத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று தத்துவமறிந்தவர்கள் போதிக்கிறார்கள். அவ்விதம

சந்தேகங்களைத் தர்க்கத்தின் துவாரா போக்கடித்துக்கொண்டு உமது அத்விதீய ஆனந்தத்தை நாங்கள்சீக்கிரம் அனுபவிப்போமாக. எங்கள் மூடத்தனம் தொலையும் வண்ணம் எங்களுக்கு ஞானோதயம் உண்டாகுமாக. இவைகள் கைகூடவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். ரக்ஷியும். ரக்ஷியும். ரக்ஷியும். ஹே தேவா!

ஹே! ஸ்வயம்பிரகாசா! உம்மிடமே நாங்கள் லீனப்பட்டிருப்பதைத் தெரிந்து கொள்ளாதிருக்கிறோம். நாங்கள் எப்பொழுதும் உம்மிடம் இருத்தலைக் கிரஹித்து பின்னபுத்தியை ஒழிப்போம். உமது அனுக்கிரஹம் எங்களுக்கு ஆதாரம். நீர் எங்களுக்கு இந்தப்பிரபாவத்தைத் தெரிந்துகொள்வதற்கு, புத்தியையும் உமது ஆக்ஞானுசாரமாக நடப்பதற்கு சரீரபலத்தையும் கொடும். ஹே பராத்பரா! பிரபஞ்சத்தின் அபிவிருத்திக்கு எது நல்லதோ பூதங்களின் அபிவிருத்திக்கு எது நல்லதோ அதுவே உமது இஷ்டம்.

ஹே ஆனந்தரூபா! உமது ஆனந்தம் பிரபஞ்சமெல்லாம் நிறைந்திருக்கினும் அது எங்களுக்கு அடிக்கடி அனுபவத்திற்கு வாராமலிருக்கிறது. காரணமென்ன? நாங்களே கற்பித்துக்கொண்ட எங்கள் அஞ்ஞானமே எங்களுக்கிவ்வித ஆனந்தத்திற்கு இடையூறுகின்றது. அந்த அஞ்ஞான மாகட்டும் மாயையாகட்டும் எப்பொழுது உண்டாச்சுதோ, எவ்விதம் ஏற்பட்டதோ என்று ஊஹிக்க எங்களுக்கு அவசியமில்லையானாலும், அந்த அஞ்ஞானத்தைத் தொலைத்துக்கொள்ள அவசியமிருக்கின்றது. ஆகையால் அதில் பிரயத்தனத்தை நாம் செய்து கொள்ளவேண்டும் மாயையைத் தொலைப்பதற்கு ஞானமே சாதனம். உதாரணம்: மதுபானத்தால் சந்தோஷமாக இருப்பதாகத் தோன்றும். ஆனால் அதின் கஷ்டம் பலஹீன ரூபகாக பின்னர் புலப்படும். பின்னர் உண்டாகும் பலஹீனம், உபத்திரவம், இவைகளால் முன்உண்டான சந்தோஷமானது சிறிதுகாலமிருக்கும் அற்பசந்தோஷ மென்றும், உண்மையில் துக்கமென்பதையும் அறிவான். மாயாகற்பித சுகங்களும் முடி

வில் உபத்திரவத்தை யுண்டாக்கு மென்பதாகத் தெரிந்து கொண்டவன் ஞானி. அப்படிப்பட்டவனுக்கு இந்தஆன ந்தம் கைகூடும். பேராசையால் உண்டாகும் துக்கத்தைத் தெரிந்து கொண்டவன் அதற்கு ஈடுபடாமல் ஆசையை ஒழித்துச் சுகிப்பான். அவ்விதம் பிரமைகளை யொழித்து பிரபஞ்சத்தில் உமது ஆனந்தத்தை நாங்களடைவோமாக. எங்குபார்க்கினும் ஆனந்தமே. பக்ஷிகளின் குரலிலும், விரு க்ஷங்களின் வனப்பிலும், மனிதர்களுடைய பேச்சுகளிலும் நதிகளின் பிரவாகத்திலும் எங்குபார்க்கினும் உமது ஆனந் தமேயன்றோ? எங்களுக்கு துக்கத்தில் அவகாசமில்லை. இவ் வித ஆனந்தத்தை எங்களுக்கு உண்டாக்கி ரக்ஷியும்.

சகோதரர்களே! நாமெல்லோரும் கடவுளைப்பிரார்த் திக்கின்றோம். அவர் நமக்கு சாந்தியை அளிப்பார். அவக் ஸ்வாபம் அவ்விதம். அப்படி அவர் நமக்குச் சாந்தியைர் கொடுத்துக் கொண்டிருக்க நமக்கு ஏன் துக்கமுண்டாகி ன்றது. அந்தத் துக்கம் நமது கற்பனையே. பராத்பரன் நம்எல்லோரிடத்தும் சமானமான தயை உடையவனே. அவர் நமது துக்கத்தில் கூட நம்மோடு இருக்கிறார். துக் கம் உண்டான பொழுது துக்கத்தை உண்டு பண்ணிய வேலையைச் செய்யக்கூடா தென்பதாகவும் அவ்வித வே லையை நாம் இனி எப்பொழுதும் செய்யக்கூடாதென்பதா கவும் ஞானத்தை நமக்களிப்பதற்கு பகவானே. அவ் வித நியமத்தையும் துக்கத்தையும் உண்டாக்கியிருக்கிறார். ஆகையால் துக்கத்தின்மூலம் நாம் சுகப்படுவதற்குப் பாட ங்களைச் சொல்லுகிறார். துக்கங்களிலும் நமக்கு ஸகாயமா யிருந்த பகவானை நாம் ஸதா நமஸ்கரிக்கிறோம்.

ஹே சகோதரர்களே! மதபேதங்கள் அனேகங்கள்பிர பஞ்சத்திலிருக்கினும் அவைகளெல்லாம் ஒரே கடவுள் இரு க்கிறாரென்பதாக ஒப்புக்கொள்ளுகின்றன. மதங்களை உத் தாரணம் செய்பவர்கள் தேசகால வித்தியாசங்களை அனு சரித்து ஆசாரபேதங்களை உண்டாக்கினாலும் அவர்களெல் லோரும் ஒரே கடவுளை ஸேவிப்பவரென்பதாக ஒப்புக்கொ

ண்டிருக்கிறார்கள். மத உத்தாரணம் செய்தவர்களெல்லோரும் ஸகலத்தையும் அறிந்தவர்களாயினும் தேசககாலத்தை யொட்டி அவ்வித ஆசார பேதங்களை ஏற்படுத்தினார்கள். இப்பொழுது நாம் கிரஹிக்கவேண்டியதென்னவெனின், நமது மதவைஷம்யத்தாலே சண்டையிடாமல் எல்லாமதங்களும் ஒரு கடவுளையே போதிக்கின்றனவென்பதாகக் கிரஹித்து அவரவர் மதத்தை அவரவரே அவலம்பித்து பிரஹ்மத்தைக்கண்டு கொள்ளலாமென்பதாகவும் மதத்துவேஷங்களை வைத்துக் கொள்ளக்கூடாதென்பதாகவும் இப்பொழுது மஹரிஷிகள் சொல்வதாகத் தெரியவருகின்றது. இது வாஸ்தவமானபடியால் மதவைஷம்யங்களை ஒழிக்கின் நாம் சுகிப்போம்.

ஜகத்ரக்ஷகா! நாங்கள் எத்தனை ஸத்குணங்களைச் சம்பாதிக்கினும் கேவலம் ஸத்குணங்களின் துவாரா பரமசுகம் உண்டாகாதிருக்கின்றது. உமது ஸ்வரூப ஞானம் உண்டான மாத்திரத்தில் ஸர்வகர்மபந்தங்களினின்றும் விலகிப் பரமசுகத்தை அடையக்கடவோம். உமது ஸ்வரூபம் விசுவரூபமே. நீரே சாந்தமுடையவர்களில் சாந்தி. சுசிகளில் சுசி. வீர்யமுடையவர்களில் வீர்யம் கருணையுடையவர்களில் கருணை. மோக்ஷத்தை அடைந்தவர்களில் முக்தி. நீரே தர்மம். நீரே ஸௌமியம். நீரே ஆனந்தரூபர். இவ்விதமான நீரே எல்லா சேதனங்களிடத்தும் அசேதனங்களிடத்தும் நிறைந்திருக்கிறீரென்ற ஸாம்யஞானம் எங்களுக்குண்டாகுக.

ஹே ஜகத்ரக்ஷகா! நீரே உள்ளும் புறமும் நிறைந்திருக்கிறீர். நீரேயன்றோ நரகத்திலும் ஸ்வர்க்கத்திலும் நியந்தா. நாங்கள் அறியாதவர்களாகி மோசம் போகின்றோம். சண்டைகளில் நீரே இருக்கின்றீரல்லவா? சண்டையெனின் உம்மை அறியாதிருப்பதேயன்றோ! சண்டையின் பிரயோஜனம் துக்கமே. அது இல்லாதிருக்கச்செய்வதுவே கர்தவ்யம், சண்டையில்லாவிடின் சினேகமுண்டு, சினேகமே

உமது ஸ்வரூபமென்பதாக எங்களுக்குத் தெரியின் நாங்கள் கிருதார்த்தர்களே. அவ்வித புத்தி எங்களுக்கு அடிக்கடி உண்டாகும் வண்ணம் கிருபைசெய்யும்.

தீனதயாபரா! சச்சிதா னந்தஸ்வரூபா! சிருஷ்டி ஸ்திதிலயங்களுக்குக்காரணனை நீர் எங்களுக்கு ஆசிரயம். இந்த சிருஷ்டியில் உள்ள வித்தியாசத்தை ஒட்டிப்பார்க்க சிருஷ்டி நிர்நிமித்தமாயில்லையென்றும் கர்மத்தையனுசரித்து வித்தியாச மென்பதாகவும், ஈசுவரனை உமக்கு பக்ஷபாத மில்லை யென்பதாகவும் சொல்லிகிறார்கள். அவ்வித கர்மங்களைச்செய்யும் அதிகாரமும் ஸ்வதந்திரமும் எங்களுக்குண்டு. ஸத்கர்மானுஷ்டா னத்தால் நல்ல ஜன்மமும் துஷ்கர்மானுஷ்டானத்தால் கெட்ட ஜன்மமும் கர்மத்திற்கு அத்யக்ஷனை நீரே அளிப்பீர். அவ்விதம் தெரிந்து நாங்கள் ஸதா ஸத்கர்மங்களைச் செய்பவர்க ளாவோமாக.

ஸர்வதயாளோ! உம்மை அறியாதவர்களுக்கு உம்முடைய வைபவங்களைக் கண்ணாரக் காட்டி ரக்ஷிப்பதற்காக எங்களுக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறீர்? அறியக்கூடாத பகவத் தத்துவத்தை எங்களுக் கவ்விதம் தெரியச் செய்விக்கின்றீர். உமது அவதார கதாசிரவணத்தில் மூழ்கி இந்தச் சிரவணு மிருதத்திற்கு வசப்பட்டவர்களாய் சில பாகவதர்கள் முக்திடைக் கூடக் கோராமல் உமது பஜனையையே பரமசுகமாக வெண்ணுகிறார்கள். உமது சரித்திரம் அதிக அற்புதமான சக்தியை யுடையது. அவ்வித கதைகளில் எங்களுக்கு ருசி பிறந்து நாங்கள் சுகிப்போமாக!

சகோதரர்களே! நாம் ஸதாதெய்வ சிந்தையுடையவர்களாகி அவருடைய சங்கற்பானு சாரமாக நடந்து சுகிக்க வேண்டுமல்லவா? நமக்கு ரக்ஷகனை பகவான் அநேக அவதாரங்க ளெடுத்து நம்மை ரக்ஷித் திருக்கிறார். கிறிஸ்து மஹம்மது, புத்தர், கிருஷ்ணன், முதலிய அவதாரங்கள் நமக்கு தர்ம உபதேசத்திற்காக ஏற்படினும், மனிதர்கள் எல்லோருக்கும் ஸமானமான தர்மோபதேசம் செய்ததாக இல்லை, அந்தந்த தேசத்தில் அந்தந்தக் காலானுசாரமாக

உபதேசங்களைக் கொடுப்பதற்கு அவதரித்திருக்கிறார்கள். எப்பொழுது அதர்மம் விருத்தியாகுமோ அப்பொழுது பகவானவதரித்து தர்மத்தை ஸ்தாபிப்பார். இப்பொழுது கிறிஸ்தவமதம், மஹம்மதியமதம், பௌத்தமதம், ஜைனமதம், முதலாயுள்ள மதங்கள் அனேகம் இத்தேசத்திலிருக்கின்றன. மதத்துவேஷம் யில்லாது ஒழிந்தால் அவரவருடைய மதமும் அவரவருக்கு விசேஷமான படியால் அதை அநுசரித்த ஆசாரங்களை அனுஷ்டித்துக் கொண்டு இதர மதங்களைக் கௌரவிப்பார்கள். ஆகையால் பகவானவதரித்து மதஸமஸரத்தைச் செய்து நாமெல்லோரும் அத்விதீய பிரஹ்மத்தை ஸர்வாந்தர்யாமியாகத் தெரிந்து சுகிப்பதற்காக நமது தேசத்தில் பகவான் அவதரிப்பார். அந்த ஜகத்குருவின் வருகைக்கு எதிர் பார்த்துக் கொண்டு மத வைஷம்யங்களை ஒழித்து நாம் சுகிப்போம். அவ்வித சுகம் நமக்கு சீக்கிர காலத்தில் உண்டாகுக!

இராமச்சந்திர நாயுடு

நெல்லூர் M. பார்வதீசம் எனபவரால் தெலுங்கு திவ்யஞான தீபிகையில் 2 சஞ்சிகைகளில் எழுதியிருந்தவற்றை மதுரை பூரண சந்திரோதயப்பத்திரிக்கைக்காக தமிழ்ப்படுத்தியது.

யான் செய்ய வேண்டியதென்ன.

மானிடர்கள் அடைய வேண்டிய பரம புருஷார்த்தம் மோக்ஷமென்பதாம். பிரஹ்மஞான சபையில் சேர்ந்தவர்கள் அதற்காக விடாமுயற்சி செய்ய காப்புக்கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். மோக்ஷமென்று அவர்கள் கூறுவதை இவ்வுலகில்தானே அடையலாம். அப்படியடைந்த மனிதனை ஜீவன் முக்தனென்று சொல்வார்கள். மனிதன் சத்வகுண பரிபூரணனாகவேண்டுமென்பதுதான் அதன்கருத்து. இங்கிலீயடைய ஐந்து குறிப்புச்சொற்கள் இருக்கின்றன. அவையா

வன: சுத்திகரிப்பு, மன அடக்கம், குணப்பயிற்கி, தியானம், பணிவிடை இவையாகும். இவை ஒவ்வொன்றிலும் இரண்டு வார்த்தைகள் சொல்லுகின்றேன்.

அததற்குள்ள நல்ல வுணவுகளால் ஸ்தூலாதி தேகங்களை களங்க மில்லாமலாக்குவது தான் சுத்திகரிப்பு.

'சத்குரு பாதார விந்தங்களில்' என்ற புத்தகத்தில் சொல்லி யிருப்பதுபோல மனதானது உன் குதிரையே யாகும். அக்குதிரை தனக்கு தோன்றினது போலப் போகும். அதை யப்படிவிடாமல் உன சொற்படி கேட்கும்படி செய்யவேண்டும். நீ சொல்லாத வேலையை அது செய்யுமானல், அதைத திருப்பி நீ சொல்லும் வேலையைச் செய்யும்படி தூண்ட வேண்டும். இப்படிப் பழக்குவதுதான் மன அடக்கம்.

குணப்பயிற்சியில் எல்லா குணங்களும் பயிற்சி செய்ய வேண்டியது தானுலும் முக்கிய மான இரண்டு குணங்களை இவ்விடத்தில் சொல்லுகின்றேன். அவையாவன: மன்னித்தல் அல்லது சாந்தி, அன்புவைத்தல். சகலர்களுடைய பிழைகளையும் மன்னித்து அவர்களிடத்தில் அன்பு வைக்க வேண்டும். இதுதான் பிரஹ்ம ஞானசபை அங்கத்தினர்களுக்கு ஓர் குணபூஷண மாகும். பகவத் கீதையில் பகவான்

सुहृन्मित्रार्युदासीन मध्यस्थ द्वेष्य बन्धुषु।
साधुष्वपिच पापेषु समबुद्धिर्विशिष्यते ॥

என்று சொல்லி யிருக்கின்றார். இதன்பொருள் सुहृत् சுபாவமாகவே அன்னியர்களுக்குஹிதத்தை செய்கிறவன. मित्रम् நட்பினல்உதவி செய்கிறவன் अरि இகத்திலுள்ள ஏதாவது காரணத்தையொட்டி பகை செய்கிறவன். उदासीनः என்ன நடந்தபோதிலும் தான் அதில் நியாயமாய் செய்ய வேண்டி

பதைசெய்யாமலிருப்பவன். मध्यस्थः தன் வேலைக்கு குறைவுவராமல் அன்னியர்களுடைய வழக்குக்களை தீர்ப்பவன். द्वेष्य பிறவியினாலேயே பகை செய்கிறவன். बन्धु உற்றான். साधु நற்செய்கைகளைச் செய்கிறவன. पापि கெட்ட செய்கைகளைச் செய்கிறவன். இததனைபெயர்களிடத்திலும் அவர்களுடைய பிழைகளை மன்னித்து அவர்களிடத்தில் அன்புவைக்கும்படியான சமபுததியானது விசேஷப்பட்டது, இவ்விடத்தில் இந்த சுலோகத்தை எடுத்துக்கூறினது ஏனென்றால், இந்த சுலோகம் முடிந்தவுடன் பகவான் தியானவழிகளைச் சொல்லத் தொடங்குகின்றார்.

'योगीयुञ्जीतसततमात्मानं रहसिस्थितः'

(கீதையில் ஆறாவது அத்தியாயம் ஒன்பதாவது சுலோகம் முதல பார்க்கவும்.)

ஆகையால் தியானத்தில் தேற்சியடைய வேண்டுமென்று ஆசையுள்ளவன், தியானத்திற்கு முன சொல்லியிருக்கிற பிழைபொறுத்து அன்பு பாராட்டுதலை நன்றாகப்பழக்கவேண்டும். இந்தச் சமபுததி யில்லாமல் தியானம் நன்றாக வராது. அப்படி யில்லாமல் எனக்கு தியானம் வந்துவிட்டதென்று ஒருவன் சொல்லுவானெனில் அத்தியானம் பொய்யான தியானமேயன்றி சரியான தன்று. மானிடர்களே! இப்பிழை பொறுத்து அன்பு வைத்தலை அகத்திலே ஆரம்பியுங்கள். சமுதாயத தலைவனாக வரும்போது தானாகவே வந்துவிடும். இக்குணத்தை கணவனும மனைவியும் ஒருவருக்கொருவர் காணபியுங்கள். தாய் தகப்பனிடத்தில் காண்பியுங்கள். சகோதரர்களிடத்தில் காண்பியுங்கள். மக்களிடத்தில் காண்பியுங்கள். பிற்பாடு கிராமத்திலுள்ளோரிடத்தில் காண்பியுங்கள். உலகம் முழுவதும பாராட்டுங்கள். இப்படிச் செய்வீர்களேயாகில் எளிதில் உங்கட்கு தியானம் செய்ய இயலும். முன் சொன்ன சுத்திகரிப்பு, மனஅடக்கம், குணபயிற்சி இவைகளை நியாயமாகச்செய்து வந்தால் தியானத்திற்கு நிரமபவும் உதவியாயிருக்கும்.

தியானத்தில் ஒரு மூர்த்தியை ஆராதித்து அதில் கூடியிருக்கும் குணங்களை தியானம் செய்தோ அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு குணமாக தியானம் செய்தோ பழகினல் சர்வ குணை பேதனை ஜீவன் முக்தனாகலாம்.

பணிவிடை செய்வது எங்ஙன மெனில் செய்வன திருந்தச் செய், என்னும் உபதேசத்தைக் கைக்கொண்டு யாதொரு தொழிலைச் செய்தாலும் அதை செவ்வையாய்ச் செய்வதுதான் பணிவிடை. இப்பணிவிடையை சடமாயாவாதி கூடச்செய்கிறான். ஆனல் இவரிருவரில் பிரஹ்மஞானியான மனிதன் எல்லாவற்றிற்கும் ஈசுவரனை ஸாக்ஷிப்படுத்துகின்றான். அதை யொட்டி ஈசுவர சம்பந்தமான ஆராதனை முதலானவைகளும் அவனுக்கு வருகின்றன. பிரஹ்மஞானி இத்துடன் ஈசுவர விஷயமான செய்கைகளையும் புத்தியாலறிந்து சாஸ்திர ரீதியாகச் செய்கின்றான். பிரஹ்மவித்தை யென்றால் அதி லடங்காதது ஒன்று மில்லையல்லவா? யாதொன்றினல் எல்லா அபரா வித்தைகளும் அறியப்படுகின்றனவோ அதுதான் பராவித்தை. அதுதான் பிரஹ்ம வித்தை. ஆகையால் மானிடர்களே! நீங்கள் செய்யும் எதையும் பிரஹ்ம ஞானத்தி லொட்டின தல்ல வென்று எண்ணாதேயுங்கள். குடும்ப வேலை செய்தாலென்ன, ஜீவனோபாயத் துக்குரிய வேலை செய்தாலென்ன, ராஜாங்கச் சீர்திருத்த வேலை செய்தாலென்ன, ஜனசாரத்திற் குள்ள வேலை செய்தாலென்ன, ஈசுவர விஷயமான வேலை செய்தாலென்ன, எந்தத் தொழிலையும் நியமப் பிரகாரம் திருந்தச் செய்ய வேண்டியது. இப்படிச் செய்து வந்தால் அதே பணிவிடை யாய்விட்டது. சகோதர சகோதரிகளே! எல்லாம் பணிவிடை யானலும் மானிடர் குலத்துக்காக வென்று வேலைசெய்வது நலம். ஏனென்றால் அப்போது தான் நாம் இச்சபையை நியமித்த குருக்களுடைய கருணைக்கு அடுத்துச்செல்கின்றோம். அவர்களோ

अनन्याश्चिन्तयन्तो मां येजनापर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

என்றுகூறியிருக்கிறார்கள்.

நம்மிடமில்லாததும், ஆனால் கிடைக்க வேண்டுமென்று அபேக்ஷையுள்ளதாகவுமுள்ள பொருளை அடைவது யோகம். இருக்கின்றதை பரிபாலிக்கிறது க்ஷேமம். இவ்விரண்டையும் குரு ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், சுயநயமின்றி நாம் அவருடைய வேலையைச்செய்ய வேண்டும். அவருடைய வேலையாவது பொது ஜனங்களுடைய வேலைதான். இவ்வேலையை சுயநயமன்றியில் செய்பவர்களுக்கு குரு கருணை அதிகமாக வுண்டாகும் என்கிற உண்மை பலவிடங்களிலும் நாம் அறிந்திருக்கிறோம். வேலை செய்பவர்களுக்கு அதிகம் வேலை கிடைப்பதும், அநேகம் கஷ்டங்கள் அனுபவிக்க வேண்டி வருவதும் எல்லாருக்கும் அநுபவகோசரமல்லவா? (இதற்கு நம்முடைய பிரஸிடண்டு ஸ்ரீமதி அன்னிபெஸண்டு அம்மாள் நல்ல உவமை.) அப்படி வருவதும்குரு சகாயந்தான. முதலாவது அவருக்கு கூடுதலாக சகாயஞ்செய்ய நமக்கு இடையுறு வருகிறது. இரண்டாவது நம்முடைய ஸஞ்சித கர்மங்கள் சீக்கிரமாக முடிந்து போகின்றன. லோகரக்ஷணார்த்தம் புறப்பட்டிருக்கிற குருக்களுக்கு பொது வேலைசெய்ய காத்துக் கொண்டிருக்கிற நமது தேகம் மூலம் தான் வேலைசெய்ய முடியும். ஆகையால் ஸ்ரீ ஜினரஸதாசர் சொன்னது போல குருவின் திருக்கரங்களுக்கு நாம் அலங்கார ஆயுதமாகிறோம். இச்செய்கையால் அவரை நாம் நேரில் காணலாம். இதல்லாமல் இந்து மதமோ, கிறிஸ்து மதமோ, வேறுமதமோ பெரிதென்றும் அத்வைதமோ, விசிஷ்டாத் வைதமோ, த்வைதமோ, பெரிதென்றும், சைவமோ, வைஷ்ணவமோ, பெரிதென்றும் தர்க்கிக்கவேண்டாம். குருக்களேயோ, அவர்களை நம்பாவிடில் உங்களுடைய மேலான சைதன்னியத்தையோ ஸாக்ஷியாக வைத்து வேலை செய்யுங்கள்! உங்களது குணங்களை சுத்தப்படுத்தி பரிபூரண மாக்குங்கள்! மானிடரின் நோக்கமான மோட்சத்தை அடையுங்கள்.

எஸ். வெங்கிடாசலமையர்.

சாரணர் பக்கம்.

(256-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

சா. த:—இந்திய வாலிபர்களை தேசபக்தர்களாக்குவது தான் நோக்கம். இந்தியர்கள் தேசத்தின் நன்மையை நாடவேண்டியது அவசியமல்லவா? அதற்காகத் தான் வாலிபர்களாயிருக்கும் போதே பழக்கப்படுகிறார்கள். தேசநலமும் சுயநலமும் முரண்படுமாயின் தேச நலத்தையே தேடவேண்டும், என்றும் சுயநலத்தை விடவேண்டும் என்றும் இளம்பிராயத்திலேயே கற்பிக்கப்படுகிறார்கள்.

மா:—ஒரேவிதமான உடையைத் தரித்துக்கொண்டு கையில் தடியை வைத்துக்கொண்டால் தாங்கள் சொல்லும் நோக்கம் எப்படி நிறைவேறும்? நான் தெரியவேண்டும் என்ற ஆசையினால் தான் கேட்கிறேன். சொல்லவேண்டும்,

சா. த:—உடையின் பிரயோஜனத்தைப் பற்றியும் தடியின் பிரயோஜனத்தைப்பற்றியும் பின்னர்க் கூறுகிறேன். ஒவ்வொரு சாரணனும் தினந்தோறும் பரோபகாரமான காரியங்களைச் செய்யும்படி பழக்கப்படுகிறான். கட்டாயமாய் ஒரு பரோபகாரச் செயலையாவது தினம் தோறும் செய்யவேண்டும். இம்மாதிரி பால்யம் முதல் ஒவ்வொரு நாளும் ஒரு உபகாரச் செயலையாவது செய்யாமலிருப்பதில்லை யென்று கங்கணம் கட்டிக்கொண்டு செய்துவந்தால் அப்பையன் பெரியவனாகும்போது பரோபகாரம் செய்வதே அவன் இயற்கையால் விடாதா உபகாரம் செய்வதென்றால் ஒருவிதமான கைம்மாற்றையும் சாரணன் பெறக்கூடாது. பெறவேண்டும் என்றுமனதில் கூட எண்ணக்கூடாது என்பது முக்கியமான விதியா

கும். அப்படிப்பழகினல் பிறருக்கு உதவி செய்ய வேண்டிய சமயம் நேரும்போதே அவன் நேரே சென்று உபகாரம் செய்தே தீருவான்.

மா:—ஆம் அது மெய்தான். ஆனல் இதனல் சாரணன் தேசபக்தனவது எங்ஙனம்.

சா. த:—அவசியமுள்ள போதெல்லாம் உபகாரம் செய்ய சித்தமாயிருப்பவன் பெரியவனப் போன பிறகு ஒரு கிராமத்தில் வசிக்கிறவனயிருந்தால் கிராமத்தின் சுகாதாரம், முதலியவைகளை தேடாமலிருப்பான ? நகரவாசியானல் நகரத்தைச் சீராக்க முயலாமலிருக்கமுடியுமா ? தேசத்திற்குக் கஷ்டம் நேரிட்டால் அக்கஷ்டத்தை நிவர்த்திக்க முயலாமல் சுகமாக இருக்கமனம்வருமா? ஆகையால் தான் அவன் தேசபக்தனவான் என்பது நிச்சயம் என்று சொன்னேன். தான் இருக்கும் கிராமத்திற்கும், நகரத்திற்கும் நாட்டுக்கும் சீரைத்தேடி அதற்காக உழைப்பவன் தானே தேசபக்தன் அல்லவா ?

மா:—தாங்கள் சொன்னது எனக்கு நன்ருக மனதிற்பட்டது. இன்னும் சில சந்தேகங்களும் தெளியவேண்டும். தங்களுக்கு இப்போது காரியமிருக்கிறது ஆகையால் பின்னெரு சமயம் தங்களைச் சந்திக்கிறேன். நமஸ்காரம்.

சா. த:—நல்லது மிகச் சந்தோஷம். போய்வா. நாளை வந்தால் எனக்கும் சாவகாசமிருக்கும். வேண்டிய கேள்விகளைக் கேட்கலாம். நமஸ்காரம்

தர்மம்

248ஆம்பக்கத் தொடர்ச்சி.

முற்கணத்தில் பரிசுபெற்றவனே பிற்கணத்தும்வந்திருப்பினும் முன் கொடுத்ததை மறந்து பின்னும் கொடுப்பதும் தமக்கு வறுமைப் பாடுறினும் அவ்வறுமையினும் இயன்றளவு கொடுத்து மகிழ்வித்தலும் வள்ளியோர் கடனும். இக்கருத்தைப பின்வரும் பாக்கள் உணர்த்துகின்றன.

இன்றுசெலினுந் தருமேசிறுவரை
நின்றுசெலினுந் தருமேபின்னும்.
முன்னேதந்த னென்னுது துன்னி
வைகலுஞ் செலினும் பொய்யலனுகி
யாம்வேண்டி யாங்கெம்-வறுங்கல நிறைப்போன்

(புறநானூறு கஎக)

ஆற்றுப்பெறுக் கற்றடிசுடு மன்னுளுமவ்வா
றூற்றுப்பெருக்கா லுலகூட்டும்-- எற்றவர்க்கு
நல்லகுடிப் பிறந்தார் நல்கூர்ந்த ராளுலு
மில்லையென மாட்டா ரிசைந்து.

எவர்கள் மிகவும் முயற்சியுள்ள புத்தி யுடையவர்களாய் தர்மத்தைச் சேர்க்க விரும்புகிறார்களோ அவர்களுக்கு அரையாமம் ஆயுளிருந்தாலும் அதற்குள் அவர்கள் தங்கள் நன்மையைத் தேடிக்கொள்ளுவார்கள். இவ்விதம் தருமத்தைச் செய்ய விருப்ப மில்லா தார்க்கு எவ்வளவு காலம் ஆயுளிருந்தும் பயனில்லை. எவ்விதமெனில் காகத்திற்கு வெகு நாட்கள் ஆயுளிருந்தும் அது தனக்கு நன்மையைத் தேடிக் கொள்வதில்லை. இவ்விதமே சந்தேகமுள்ள மூடரும் ஆயுளெவ்வளவு இருந்தாலும் தருமம் செய்வதில்லை,

இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமஞ் செய்யாதவர் தம்பாலதாகும்
உறுமுடிநாளும் உரோணிகுழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழுகிலாவே'

என்று திருமந்திரம் நண்குணர்த்துகின்றது. ஆகையால்யாவரும் தர்மத்தை நடத்திச் சுகம் பெறுவாராக.

எம். எம். நாராயணஸாமி ஐயர்,

இக்காலத்துக்கு ஏற்றவாறு தர்மத்தை எவ்விதம் செய்யவேண்டுமென்பதை ஆசிரியர் காட்டவில்லை. ஏழைகளுக்குப் பொருளுதவுவதுபோலவே ஜனோபகாரத்திற்காக ஆங்காங்கு ஸபைகள் ஏற்பட்டுள. அவைகளுக்குத் தாமாகவே சென்று பொருள் கொடுத்தல் ஸாத்விகதானமாம். கேட்டபின் கொடுத்தல் ராஜஸ தானமாம். கொடுப்பேன் கொடுப்பேன் என்றலையவைத்து பின்னர் கொடுத்தல் தாமஸதானமாம், (ப—ர்)

பம்பாய் ஸேவா ஸதனம்.

காலம் சென்ற கனம் ஜட்ஜ் ரானடே அவர்களின்
மனைவியார், மாது ஸ்ரீ ரமாபாய் ரானடே அவர்கள் அக்கி
ராசனத்தின் கீழ் நடைபெற்றுவரும் பம்பாய் ஸேவா ஸத
னத்தின் 10-வது வருஷ அறிக்கைப் பத்திரத்திலிருந்து
அச்சபையானது மிகவும் நன்றாக இந்திய ஸ்திரீகளின் அபி
விருத்தியின் பொருட்டு உழைத்து வருகின்றது என்று
அறியச் சந்தோஷிக்கின்றோம். அச்சபையின் உப அக்கி
ராஸனரில் ஒருவராய் லேடி சந்தாவர்க்கர் அமைந்திருக்கி
றார். ராஜப்பிரதிநிதியவர்களின் மனைவியாராகிய லேடி
செம்ஸ்போர்டுபம்பாய் கவர்னர் அவர்கள் பத்தினியாராகிய
லேடி வில்லிங்டன், ஸர் ஷாபூர்ஜீ பரோசா, இன்னும் அநே
கர் இச்சபையின் மூலதனத்திற்குப் பொருள் கொடுத்தி
ருக்கிறார்களாம். 1918-ஆம் வருஷத்தில் அடியிற்கண்டபடி
க்குள்ள காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. அவையா
வன:—இச்சபையின் கட்டடத்தில் ஏழைக்கைம்பெண்கள்,
வயதுமுதிர்ந்த ஸ்திரீகள், குழந்தைகள் அநேகர் இலவச
மாகப்போஷிக்கப்பட்டும், படிப்பிக்கப்பட்டும் வந்தார்கள்.
அனாதைகள் ஆசிரமத்தில் 25 ஹிந்துக்களும், ஹிந்து ஆசி
ரமத்தில் 18 ஹிந்துக்களும் பாரசீ ஆசிரமத்தில் 5 பார்ஸி
ளும் அவ்வாறு ஆதரிக்கப்பட்டார்கள். 900 ஏழை ஸ்திரீ
களுக்கும் குழந்தைகளுக்கும் இலவசமாக வைத்தியம்
செய்யப்பட்டது. கைத்தொழில் வகுப்பில் 125 ஸ்திரீகள்
தையல், நூல் பின்னல் வேலை, சமையல் இவைகளைக் கற்று
கொண்டார்கள். பிரதமக்கல்விச்சாலைகளில் உபாத்திமாராவ
தற்கு 75 ஹிந்து ஸ்திரீகள் பழக்கப்பட்டார்கள். சுகாதா
ரத்தில் 54 ஸ்திரீகளுக்கு விசேஷக்கல்வி புகட்டப்பட்டது.
மற்றைக்கல்வி 125 .பேருக்கு கொடுக்கப்பெற்றது. 95
பார்ஸி 54 முகம்மதியர் 107 ஹிந்து ஆக 256 ஏழைச்சிறு
வர் சிறுமிகளுக்கும் பள்ளிக்கூடத்து மத்தியான ஓய்வு
நேரத்தில் புஷ்டியான ஆகாரம் கொடுக்கப்பட்டது. 120
ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவம் செய்யப்பட்டது.
இதைத்தவிர ஆகாரமும், வஸ்திரமும், இலவசமாகக் கொ
டுக்கப்பட்டது. உயர்தரப்படிப்புக்காக இனம் 1-க்கு மீ
1-க்கு ரூ. 17 வீதம் இரண்டு ஏழைப்பெண்களுக்கு உபகா
ரச்சம்பளம் கொடுத்தார்கள். ஆஸ்பத்திரிக்குச் சென்று
ஏழைகளுக்கு ஆறுதல் செய்தல் முதலிய கைங்கரியம்
செய்யப்பட்டது. இன்புளுவென்சாக் காய்ச்சலால் அவ

ஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த ஜனங்களுக்கு ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று இந்த ஸேவாஸதனத்தார் ஆறுதல் செய்தார்கள். கைத்தொழில் காட்சியில் இச்சபையார் அனுப்பிய பொருள்களுக்காக இரண்டு பதக்கங்கள் பரிசளிக்கப்பெற்றனவாம்.

இச்சபையானது செய்திருக்கிற கைங்கரியம் யாவரும் போற்றத்தகுந்தது. இச்சதனம் தினே தினே அபிவிர்த்தியாகுக. இம்மாதிரியான ஸேவாஸதனங்கள் நாடெல்லாம் ஸ்தாபகமாகுக.

சமாசாரம்.

தார்மிக பிராமண சங்கம்:— காரியதரிசி ஸ்ரீமான் டி. வி. கோபாலசாமி ஐயர் அவர்கள், அடியில் கண்ட தீர்மானங்கள் மேற்கண்ட சங்கத்தின் காரிய நிர்வாக கமிட்டியாரால் அடையாற்றில் சென்ற டிசம்மர்மீ 8உ அன்று நடைபெற்ற சந்திப்பில் நிகழ்ந்தனவென்றும் அவைகளைப் பிரசுரிக்கும் படிக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

I. இதர வர்ணத்தாருடைய யாதொரு நிர்ப்பந்தமின்றி தீயர் என்ற ஜாதியார் பப்ளிக் வீதிகளில் செல்ல பூரண உரிமையுள்ளவர்களென்று ஸ்தாபிக்க முயல்வதில் தார்மிக பிராமண சங்கத்தின் நிர்வாக கமிட்டி அங்கத்தினர்கள் தங்களுடைய பூரணமான அனுதாபத்தைக் காட்டுகிறார்கள். இத்தீர்மானத்தை பத்திரிகைகளுக்கும் ராரீசமூப்பன் அவர்களுக்கும் வி. கிருஷ்ணன் பிஏ. பி. எல் அவர்களுக்கும், மஞ்சேரி ராமைய்யர் அவர்கள் மூலம் கள்ளிக்கோட்டையில் வைத்தியம் கே. வி. சோமி அவர்களுக்கும் தெரிவிக்கப்படும்.

II. தீண்டா ஜாதியார் என்ற கீழ்ஜாதியார் கடவுளை வணங்குவதற்காகவும், உயர்ந்த தேவதைகளை வழிபடுவதற்காகவும் கட்டியிருக்கும் கோவில்களில் ஜீவபலி, மத்யபானம் இவைகளை விலக்கி வழக்கமாக மாமிசம், மது இவைகளை நிவேதனம் செய்கிறதில்லையானல் அக்கோவில்களுக்குச் செல்வதை தார்மிக பிராமணர் தம கடமையாகக் கொள்ளக்கடவர்.

III. தீண்டா ஜாதியாரின் தீண்டாத் தன்மையைப்பற்றி அறிவைப்பரவச் செய்வதற்காக பிரஹ்மஸ்ரீ மஹா தேவசாஸ்திரிகள் ஒரு துண்டுப் பத்திரிகையை எழுதிப் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அதனை சென்னை ராஜதானியிலுள்ள எல்லா பாஷைகளிலும் மொழிப் பெயர்த்து அச்சிட்டு வெளியிட வேண்டும் என்றும் தீர்மானிக்கலாயிற்று.

பத்திரிகை விமர்சம்.

பெண் கல்வி 8-ம் தொகுதி பகுதி 1 :— விமர்சத்துக்காக எமக்கு மேற்கூறிய பகுதி அனுப்பப்பட்டுளது. அக்டோபர் மாதம் முதலாக தொகுதியானது ஆரம்பித்து வந்ததை இது முதல் ஜனவரி மாதம் முதலாக இருக்கும்படி ஏற்பாடு செய்திருப்பதாக அறிகிறோம். ஸ்திரீகளுக்கு விசேஷமாய்த் தெரியவேண்டிய சமாசாரங்

களும், வியாசங்களும் இதில் காணப்படுகின்றன. குழந்தைகள் விஷயமாய் சில குறிப்புகள் ஒரு பக்கத்தில் காணப்படுகின்றன. குழந்தைகளைப் பாதுகாப்பதும் முன்னேறச் செய்வதும் பெரும்பாலும் ஸ்திரீகள் பொறுப்பாகையால் இவ்விஷயமாய் இன்னும் அதிகப்பக்கங்களை உபயோகப்படுத்துவது உசிதமாகும். இப்பத்திரிகை நன்றாக அச்சுப்பிழையின்றி, நல்ல விஷயங்களுடன் வெளிவருகின்றது. இதனை வியாசங்கள் அனுப்பியும், சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தும் ஆதரிப்பது தமிழ் மக்கள் கடமையாகும்.

புத்தக விமர்சம்.

பிரத்திய பிஞ்ஞா இருதயம்:— ஓர் அரிய சைவ நூல் வி. ஆர். சுப்பிரமணிய அய்யர்: பி. ஆர். ராமஅய்யர் அச்சுக்கூடம் விலை அணா $6\frac{1}{2}$.

நாகர அக்ஷரத்தில் சூத்திரங்களையும் அவைகளின் தமிழ் மொழிப்பெயர்ப்பையும், க்ஷேமராஜாசாரியாரால் செய்யப்பட்ட வியாக்கியானத்தின் மொழிப்பெயர்ப்பையும் இதில் தொடுத்துள்ளது. சைவநூற்பயிற்சியுள்ளவர்களுக்கு இது உபயோகமானது. ஏனையோர் இதனை உபாத்தியாயர் உதவியின்றி படிப்பது கடினமாகும். நல்ல தாளில் அச்சிடப்பட்டிருக்கிறது

(1) பேசும்சிங்கம் (2) கணபதி (3) ஸிவாஜி மஹாராஜ் (4) குமணன் (5) நட்பின் மேன்மை (6) ஸர் ரவீந்திரநாத டாகூர் படமடங்கியகார்டு. எமக்கு இவ்வாறையும் அனுப்பிய "கல்வி பப்ளிஷிங் ஹௌஸ"க்கு எமது வந்தன மளிக்கின்றோம். முதல் ஐந்து சிறு துண்டுப் புத்தகங்களும் ஒவ்வொன்றும் இரண்டு அணாவுக்கும் ரவீந்திரநாத டாகூர் படமடங்கிய கார்டு 1 அணாவுக்கும் கிடைக்கும். முதலிரண்டும் கல்விப் பத்திராசிரியரில் ஒருவரும் சித்திரிகருமாகிய எம். எஸ் சுந்தரசர்மா பி. ஏ. அவர்களால் ஆங்கிலத்தில் வரையப்பட்டிருக்கின்றன. மதுரை புதுமண்டபத்தில் சிலையில் சமைத்துள்ள உருவங்களின் திருத்தமான மேன்மையைப்பற்றி சிலாகித்து ஒரு சிங்கம் பேசுவதாக அழகாக கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இப்புத்தகத்தில் அச்சுப்பிழைகள் மிகுந்திருக்கின்றன. கணபதி யென்ற புத்தகத்தில் சிறுவர்கள் மனதைக்கவருவதற்காக பல பழைய கதைகளைக் கூறியிருக்கிறார். ஸிவாஜியின் சரித்திரத்தை சுருக்கமாக தமிழர் அறியும்படி வெளியிட்டது நல்ல ஏற்பாடுதான். பெரும் வள்ளல்களில் ஒருவராகிய குமணன் சரித்திரத்தையும், ஸிவாஜியின் சரித்திரத்தையும் கல்விப் பத்திராசிரியரான ஆர். எஸ். நாராயணசாமி ஐயர் எழுதியிருக்கிறார். பஞ்சதந்திரக் கதையினின்று நட்பின் மேன்மையைக் காட்டும், மூன்றைத் தொகுத்து ஸ்ரீ கேதாரிராவ் எம். ஏ. அவர்கள் எழுதியிருக்கிறார்கள். லகுபதனகன் என்ற வார்த்தைக்கு பதிலாக லகுபடனகன் என்று விழுந்திருப்பது அச்சுப்பிழை. எல்லாபுத்தகங்களும் சித்திர விளக்கங்களுடன் கூடியவைகளா யிருக்கின்றன. சித்திரிகா ஸ்ரீமான் சுந்தரசர்மா அவர்கள் தான் மேற்கூறிய சித்திரங்களைச் சமைத்திருக்கின்றனர். கடைசிபடமும் அவர் சமைத்ததே. கல்வி பப்ளிஷிங் ஹௌஸ் காரரை நாம் இம்முயற்சிக்காக மெச்சுகிறோம்.